# மயிலாடுதுறை நகராட்சி

**2020–ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 28–ஆம் தேதி வெள்ளிக்கிழமை**
**மாலை 03.30 மணிக்கு நடைபெற்ற சாதாரணக்கூட்ட நடவடிக்கைகள்.**
**முன்னிலை:– திரு. சோ. புவனேஸ்வரன் (எ) அண்ணாமலை.,**
**தனி அலுவலர் மற்றும் நகராட்சி ஆணையர்**
**மயிலாடுதுறை நகராட்சி**

| மன்ற கூட்டம் நடைபெற்ற நாள் | வரிசை எண் மற்றும் மன்ற கூட்டப் பொருள் | தீர்மானம் |
|---|---|---|
| **28.08.2020** | **1)** மயிலாடுதுறை நகராட்சி ஆணையரின் **2020–ம்** ஆண்டு ஜுலை மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. | **தீர்மானஎண் .830** |
| **28.08.2020** | **2)** இந்நகராட்சியில் தூய்மைப் பணியாளராகப் பணிபுரிந்து வரும் திருமதி. செல்லம்மாள்/ பாலுசாமி என்பவர் 30.06.2020 அன்று ஓய்வு பெற்றுள்ளதை முன்னிட்டு அவரது ஊதியத்தில் பிடித்தம் செய்யப்பட்ட சிறப்பு சேமநல நிதி நகராட்சி பஙகுத்தொகை ரூ.10000/– ( ரூபாய் பத்தாயிரம் மட்டும்) நகராட்சி பொது செலவு நிதியிலிருந்து வழஙக மன்றத்தின் அனுமதி பெற வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு .** மன்றம் அனுதி வழஙலாம்.<br>**ந.க.எண்.2376/2020/பி2** | **தீர்மானஎண் .831**<br>**அனுமதிக்கப்பட்டது.** |
| **28.08.2020** | **3)** மயிலாடுதுறை நகராட்சி – குடிநீர் விநியோக பணி – Pumping main & Distribution mainல் எதிர்பாராதவிதமாக ஏற்படும் Pipe Leaks & Burst உடன் சரிசெய்து குடிநீர் பொதுமக்களுக்கு சீராக விநியோகம் செய்வதை உறுதி செய்ய வேண்டியுள்ளது. எனவே இந்த சீரமைப்பு பணி மேற்கொள்வதற்கான உத்தேச மதிப்பீடு ரூ.5,00,000/– (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) ஆகும். இதனை நகராட்சியின் குடிநீர் திட்ட நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலககுறிப்பு: 1.**அனுமதிக்கலாம்.<br>**2.**மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி தனிஅலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மன்றம் அனுமதிக்கலாம்,<br>**ந.க.எண். 3075 /2020/இ1** | **தீர்மானஎண் .832**<br>அலுவலக குறிப்புஏற்று அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| **28.08.2020** | **4)** மயிலாடுதுறை நகராட்சி – குடிநீர் விநியோக பணி – மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளில் சுகாதாரமான குடிநீர் பொது மக்களுக்கு விநியோகம் செய்வதற்காக Chlorine Liquid கலக்க வேண்டியுள்ளது. இதுவரை பெறப்பட்ட Chlorine Liquid போதுமான அளவு கையிருப்பு இல்லாததால் வரும் **26.08.2020** Chlorine பயன்படுத்த முடியாத நிலை உள்ளது. எனவே வரும் காலங்களில் Liquid Chlorine பயன்படுத்த Chlorine Liquid Supply பெற வேண்டியுள்ளது. இதற்கான உத்தேச மதிப்பீடு ரூ.10,00,000/– (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) ஆகும். இதனை நகராட்சியின் குடிநீர் திட்ட நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலககுறிப்பு:** அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண். 3074 /2020/இ1** | **தீர்மானஎண்833**<br>அனுமதிக்கப்பட்டது. |
| **28.08.2020** | **5)** இந்நகராட்சி தமிழ்நாடு நகர்புற சாலைகள் மேம்பாட்டு திட்டம் (TURIP) **2020-2021** பணிக்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை தேசிய ஒப்பந்தப்புள்ளி செய்தி மலரில் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் விளம்பரம் செய்ய இயக்குனர் செய்தி மற்றும் மக்கள் தொடர்பு துறை, சென்னை அவர்களுக்கு இவ்வலுவலக ந.க.எண்.**3587/2019**/இ1 நாள்.**27.07.2020**–ல் விளம்பரம் செய்ய தெரிவித்தன் பேரில் TRINITY MIRROR மற்றும் மக்கள்குரல் செய்தித்தாளில் **29.07.2020** அன்று விளம்பரம் செய்யப்பட்டதற்கு பட்டியல் ரூ. 70,875/– (ரூபாய் எழுபதாயிரத்து எண்ணூற்று எழுபத்தி ஐந்து மட்டும்) வழஙக கோரி EYEDEA BRAND SOLUTION அவர்கள் கடிதம் எண். DIPR 2838/TENDER/2020 நாள்:**10.08.2020**ம் தேதிய கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. எனவே மேற்படி செலவினத் தொகையை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து செலவு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலககுறிப்பு:.** அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண். 3587/2019/இ1** | **தீர்மானஎண் .834**<br>அனுமதிக்கப்பட்டது. |

**28.08.2020**

**6)** இந்நகராட்சி பொது நிதியின் கீழ் கீழ்கண்ட பணியினை செய்திட 17.06.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

<table>
<tr><th>வ எ ண்</th><th>வேலையின் விபரம்</th><th>ஒப்பந்த மதிப்பு ரூ.</th><th>ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள இரண்டு ஒப்பந்ததாரர்கள் பெயர் திருவாளர்கள்</th><th>மதிப்பீட்டை விட குறைவு/ மதிப்பீட்டை விட அதிகம்</th><th>குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள்</th></tr>
<tr><td colspan="6">பொது நிதி</td></tr>
<tr><td rowspan="2">1.</td><td rowspan="2">வார்டு எண்.24 சத்திய சாய் நகரில் தார்சாலை அமைக்கும் பணி.</td><td rowspan="2">3,50,000/-</td><td>திரு. A. சட்டையப்பன், மயிலாடுதுறை.</td><td>ரூ.303724.00 (-) 0.09% குறைவு</td><td rowspan="2">திரு. A. சட்டையப்பன், மயிலாடுதுறை.</td></tr>
<tr><td>திரு. S. வீராசாமி, மயிலாடுதுறை.</td><td>ரூ.304910.00 (+) 0.30% அதிகம்</td></tr>
</table>

அலுவலககுறிப்பு: பட்டியலில் கண்டுள்ள கலம் எண்: 6ல் குறிப்பிட்டுள்ள குறைந்தஒப்பந்தப்புள்ளிவிலைவிகிதம் கொடுத்துள்ள ஒப்பந்தாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று மன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண்.** 1772/2020/இ1

**தீர்மானஎண் .835**

அலுவலக குறிப்புஏற்று அனுமதிக்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| 28.08.2020 | 7) மயிலாடுதுறை நகராட்சி – பாதாள சாக்கடை திட்ட பராமரிப்பு பணி PS.II to PS.IV வரை குழாய் பதிக்கும் பணியில் நெடுஞ்சாலைத்துறையின் சாலையினை வெட்டி குழாய் பதிக்க வேண்டியுள்ளதால் நெடுஞ்சாலைதுறை மயிலாடுதுறை அலுவலகத்தில் அனுமதி பெறப்பட்டு, குழாய் பதிக்கப்பட உள்ளது. எனவே மேற்படி பணிக்கான சீரமைப்பு கட்டணம் ரூ.25,635/-(இருபத்தி ஐந்தாயிரத்து அறுநூற்று முப்பத்தி ஐந்து) மற்றும் GST ரூ.2365/-ஐ (இரண்டாயிரத்து மூந்நூற்று அறுபத்தி ஐந்து) தனித்தனி கேட்பு காசோலையாக ASST.DIVISIONAL ENGINEER, C&M HIGH WAYS, MAYILADUTHURAI-க்கு இந்நகராட்சியின் பொது நிதியிலிருந்து செலுத்துவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலககுறிப்பு:** 1. அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி தனிஅலுவலரின் முன் அனுமதி பெற்று தொகை செலுத்தியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>**ந.க.எண். 1967/2020/இ1** | **தீர்மானஎண் .836**<br>அலுவலக குறிப்புஏற்று அனுமதிக்கப்பட்டது. |
| 28.08.2020 | 8) மயிலாடுதுறை நகராட்சி – முடிகண்டநல்லூர் தலைமை நீரேற்று நிலையம் மோட்டார் 125HP 1 எண்ணிக்கை காலன் பைப், புஸ், Shaft, Bolt and Nut, Rubber Set, Spider Wheel கழன்று பழுது ஏற்பட்டு மோட்டார் இயக்க முடியாமல் உள்ளது. அதனை உடன் சீர் செய்ய ஆகும் உத்தேச மதிப்பீடு ரூ.90,000/-(ரூபாய் தொண்ணூறு ஆயிரம் மட்டும்). இதனை இந்நகராட்சியின் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலககுறிப்பு:** அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண். 3183/2020/இ1** | **தீர்மானஎண் .837**<br>அனுமதிக்கப்பட்டது. |
| 28.08.2020 | 9) இந்நகராட்சிக்கு சொந்தமான பார்க் அவென்யூ சாலையில் (பியர்லஸ் தியேட்டர்அருகில்) உள்ள துலா உற்சவவிழா கடைகள் அமைக்கும் இடத்தில் இருசக்கர வாகனங்கள் நிறுத்துமிடம் அமைத்து போக்குவரத்திற்கு இடையூறு இன்றி நடத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தனி அலுவலர், மயிலாடுதுறை, மாவட்டம் உருவாக்கம், அவர்களின் 12.08.2020ம் தேதிய கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி இடத்தில் ஆண்டுதோறும் துலா உற்சவ விழாக்கடைகள் நவம்பர்– 11ம் தேதி முதல் 50 நாட்களுக்கு நடத்திக் கொள்ள பொது ஏலம் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். எனவே, அதனை தவிர்த்து மற்ற நாட்ககளில் இருசக்கர வாகனஙகள் நிறுத்துமிடம் அமைத்து பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரி ஏல விதிகளின்படி நடவடிக்கை மேற்கொள்ளவும் , வருவாய் ஆய்வாளர் (சிறப்பு) மற்றும் வருவாய் அலுவலரின் 12.08.2020ம் தேதிய அறிக்கையின்படி இருசக்கர வாகனம் ஒன்றுக்கு தனியார் வாகன பாதுகாப்பகம் கட்டண விகிதாசாரப்படி சைக்கிள் ஒன்றுக்கு ரூ,5/– என்றும் மோட்டார் சைக்கிள் ஒன்றுக்கு ரூ.10/– என்றும் நிர்ணயம் செய்து ஏல நடவடிக்கை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு:** அ) பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோர மன்றம் அனுமதிக்கலாம்<br>ஆ) மேற்கண்ட கட்டண விகிதத்தினை நிர்ணயம் செய்யவும் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண்.2990**/2020/அ2 | **தீர்மானஎண் .838**<br>அலுவலக குறிப்புஏற்று அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| **28.08.2020** | **10)** மயிலாடுதுறை நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பாதாள சாக்கடை திட்டம் 8 Zone-களாக பிரித்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதில் பூம்புகார் ரோடு நீர்உந்து நிலையத்தில் Motor பழுதடைந்துவிட்டதால் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் துர்நாற்றம் ஏற்பட்டு கழிவுநீர் வெளியேறுகிறது. எனவே அங்குள்ள நீர்உந்து நிலையத்திற்கு 4HP motor மற்றும் கேபிள் வாங்கி பொருத்த வேண்டியுள்ளதால், அதற்கான மதிப்பீடு தொகை ரூ.7,00,000/-(ரூபாய் ஏழு இலட்சம் மட்டும்). இதனை இந்நகராட்சியின் பாதாள சாக்கடை திட்ட நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலககுறிப்பு:** அனுமதிக்கலாம்.<br><br>**ந.க.எண். 7724/99/இ1** | **தீர்மானஎண் .839** அனுமதிக்கப்பட்டது. |
| **28.08.2020** | **11)** மயிலாடுதுறை நகராட்சி பகுதிகளில் பாதாள சாக்கடை திட்டம் 8 மண்டலங்களாக பிரித்து செயல்பாட்டில் உள்ளது. இதில் PS.2, PS.3, PS.5, PS.6 ஆகிய Zoneகள் Back bone Sewer line-ஆக உள்ள கும்பாகோணம் சாலையில் உள்ள Collection line-ல் செல்வதால் PS.4க்கு செல்வதற்கு அதிக எண்ணிக்கையில் வீட்டு இணைப்புகள் உள்ளதால் அவ்வப்போது manhole-களில் Over flow ஆகிறது. இதனால் Pumping Stationகள் முழுவதுமாக இயக்க முடியவில்லை. எனவே PS.2ல் சேகரமாகும் கழிவுநீர்கள் நேரடியாக PS.4க்கு Pumping line அமைத்து செலுத்தினால் கழிவுநீர் வெளியேறுவதை தவிர்க்க முடியும். எனவே மேற்படி பணிக்கான மதிப்பீடு தொகை ரூ.10,00,000/-(ரூபாய் பத்து இலட்சம் மட்டும்). இதனை இந்நகராட்சியின் பாதாள சாக்கடை திட்ட நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலககுறிப்பு:** அனுமதிக்கலாம்.<br><br>**ந.க.எண்.7724/99/இ1** | **தீர்மானஎண் .840** அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| 28.08.2020 | **12)** மயிலாடுதுறை நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பாதாள சாக்கடை திட்டம் 8 Zone-களாக பிரித்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதில் பிரதான கழிவுநீரேற்று நிலையம் PS.4க்கு, PS.2, PS.3, PS.5, PS.6 ஆகிய 4 Zone-களின் கழிவுநீா் கண்ணார தெரு வழியாக செல்கிறது. கண்ணார தெருவில் 6 மீட்டர் ஆழத்தில் அமைந்துள்ள 900mm Sewer Line-ல் அடைப்பு ஏற்பட்டு PS.4க்கு முழுவதுமாக கழிவுநீா் செல்வதில்லை. இதனால் PS.2, PS.3, PS.4 Zoneகளில் கழிவுநீா் manholeகளில் வெளியேறுகிறது. இதனால் தற்காலிகமாக கண்ணாரத் தெருவில் 7.5 HP motor manhole-ல் பொறுத்தி கழிவுநீரை Pumping செய்து PS.4க்கு அனுப்ப வேண்டியது அவசியமாகிறது. எனவே இதற்கான மதிப்பீடு தொகை ரூ.11,00,000/-(ரூபாய் பதினொன்று இலட்சம் மட்டும்). இதனை இந்நகராட்சியின் பாதாள சாக்கடை திட்ட நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலககுறிப்பு:** அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண். 7724/99/இ1** | **தீர்மானஎண் .841** அனுமதிக்கப்பட்டது. |
| 28.08.2020 | **13)** இந்நகராட்சி பொறியியல் பிரிவு பராமரிப்பில் உள்ள TN-82-A-0658 என்ற எண்ணுள்ள ஈப்பு வாகனத்தின் ஸ்டேரிங்ராடு பழுதடைந்து வாகனம் இயக்குவதற்கு சிரமாக உள்ளது. எனவே அதனை புதியதாக மாற்றி சீர் செய்ய ஆகும் உத்தேச செலவீனம் ரூ.4,200/- (ரூபாய் நான்காயிரத்து இருநூறு மட்டும்) ஆகும். இதனை இந்நகராட்சியின் குடிநீா் திட்ட நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலககுறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண். 3319/2020/இ1** | **தீர்மானஎண் .842** அனுமதிக்கப்பட்டது. |
| 28.08.2020 | **14)** மயிலாடுதுறை நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பாதாள சாக்கடை திட்டம் 8 Zone-களாக பிரித்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதில் PS.2, PS.3, PS.5, PS.6 ஆகிய Pumping Station-களிலிருந்து கழிவுநீா் PS.4ல் சேகரமாகிறது. PS.4லிருந்து கழிவுநீா் PS.8க்கு தரங்கம்பாடி சாலை Manhole வழியாக நீரேற்றம் செய்யப்படுகிறது. PS.4ல் உள்ள 30HP motor 2008ஆம் ஆண்டு முதல் பயன்பாட்டில் உள்ளது. பிரதான கழிவுநீா் ஏற்றும் Pumping Station ஆதலால் motor அடிக்கடி பழுதடைந்து வருகிறது. எனவே 30HP Non Clog Pumpset ஒரு எண்ணிக்கை புதிதாக வாங்க வேண்டியுள்ளதால் அதற்கான மதிப்பீடு தொகை ரூ.15,00,000/-(ரூபாய் பதினைந்து இலட்சம் மட்டும்). இதனை இந்நகராட்சியின் பாதாள சாக்கடை திட்ட நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலககுறிப்பு:** அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண். 7724/99/இ1** | **தீர்மானஎண் .843** அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| **28.08.2020** | **15)** மயிலாடுதுறை நகராட்சி பகுதியில் 2020ம் ஆண்டு ஐப்பசி மாதம் நடைபெறும் துலா உற்சவக்காலத்தில் பார்க் அவென்யூ சாலையில் தென்புறம் பழங்காவேரி வடபுறம் சுற்றுச்சுவர் எழுப்பப்பட்டுள்ள நகராட்சி இடத்தில் தற்காலிக விழாக்கடைகள்அமைத்துக்கொள்ளவும் , அதற்கான கட்டணம் வசூலிக்கும் உரிமத்திற்கும் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிக்கோர உரிய நடவடிக்கை மேற்கொள்ளவும், அதற்கு ஆகும் விளம்பர செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக் குறிப்பு:</u>** நிர்வாக நலன்கருதி மேற்கொள்ளப்படும் செலவினத்திற்கும் மற்றும் பொதுஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரவும் செய்திதாளில் விளம்பரம் செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண்.3358/2020/அ2** | **தீர்மானஎண் .844**<br>**அலுவலக குறிப்புஏற்று அனுமதிக்கப்பட்டது** |
| **28.08.2020** | **16)** மயிலாடுதுறை நகராட்சி - சமுதாய கூடம் (மயூரநாதர் மஹால்) தட்டாரத் தெரு (வார்டு எண்.18)-ல் மருத்துவ பயன்பாட்டிற்காக கீழ்கண்ட பராமரிப்பு பணிகளை உடன் மேற்கொண்டு சரிசெய்து தரும்படி சிறப்பு/தனி அலுவலர், மயிலாடுதுறை மாவட்டம் உருவாக்கம் அவர்கள் அறிவுறுத்தியுள்ளார்.<br>அதன்படி பழுதடைந்த ஜன்னல் சரிசெய்தல், முகப்பு சுவர் M.S. Grill Gate, Electrical fans, lights, Starter for motor போன்ற பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது. குறிப்பிட்ட காலஅவகாசத்திற்குள் இப்பணியை முடித்து மருத்துவம் மற்றும் சுகாதாரதுறை பயன்பாட்டிற்கு வழங்க வேண்டியுள்ளதால் அதற்காகும் செலவீனத் தொகை ரூ.3,65,000/–க்கு (ரூபாய் மூன்று இலட்சத்து ஆறுபத்தி ஐந்தாயிரம் மட்டும்) இந்நகர்மன்ற தீர்மான எண்.821 நாள்:30.07.2020 அன்று அனுமதி பெறப்பட்டது. மேலும் கூடுதலாக Mobile toilet /doctor usage, water supply & drainage-PVC pipe and specials line அமைத்தல், HDPE tank அமைத்தல், கட்டிட முன்புறம் Doctor Wating Room சரிசெய்தல், கட்டிட பின்புறம் toilet block with GI sheet roofing, சமுதாய கூடம் உள்/வெளிபுறம் வர்ணம் பூசுதல் போன்ற இதர பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது. எனவே மேற்படி பணிக்கான கூடுதல் செலவீனத் தொகை ரூ.6,35,000/- (ரூபாய் ஆறு இலட்சத்து முப்பத்தி ஐந்தாயிரம் மட்டும்) ஆகும். இதனை இந்நகராட்சி பொது நிதியின் கீழ் பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலககுறிப்பு:** கூடுதல் செலவீனத் தொகையை மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண். 2874/2020/இ1** | **தீர்மானஎண் .845**<br>**அனுமதிக்கப்பட்டது** |

| | | |
|---|---|---|
| **28.08.2020** | **17)** மயிலாடுதுறை நகராட்சியின் பொது சுகாதாரப்பிரிவில் டெங்கு நோய்தடுப்பு பணிகள் மற்றும் கொரோனா நோய் தடுப்பு பணிகள் தற்போது ஸ்ரீ சாய்பாபா மற்றும் வளரும் நிலா ஆகிய இரண்டு மகளிர் சுயஉதவிக்குழுக்களின் தலா **15** DCB பணியாளர்கள் வீதம் **30** DBC பணியாளர்களை வைத்து தற்போது நோய் தடுப்பு பணிகள் சிறப்பான முறையில் மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது. தற்போது மழைக்காலம் தொடங்கவிருப்பதால் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், தஞ்சாவூர் அவர்களின் கடிதம் ந.க.எண்.**1256/2020**/அ**3**, நாள்:**10.07.2020** உத்தரவுபடி டெங்குநோய் தடுப்பு மற்றும் Covid–**19** (கொரோனா) நோய் தடுப்பு முன்னெச்சறிக்கை நடவடிக்கை பணிகள் மேற்கொள்ளுமாறு உத்தரவிடப்பட்டுள்ளதால், மேற்கண்ட இரண்டு சுயஉதவிக்குழுக்களின் DBC பணியாளர்கள் **30** நபர்களை கொண்டு மாவட்ட ஆட்சியர், நாகப்படடினம் அவர்களின் மஸ்துார் தினக்கூலி ஊதியம் ரூ.**385/–** வீதத்தில் ஜுலை–**2020** முதல் டிசம்பர்–**2020** வரை ஆறுமாத காலத்திற்கு நோய் தடுப்பு பணிகள் மேற்கொள்ளவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.**21,00,000/–** (இருபத்து ஒன்று லட்சம் மட்டும்)–ற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது<br><br>**<u>அலுவலக குறிப்பு</u>: 1.** மன்றம் அனுமதிக்காலம்.<br><br>**2.** கொரோனா மற்றும் டெங்கு நோய் தடுப்பு பணிகளின் அவசர அவசியத்தினை கருதி ஜுலை–**2020** மாதத்திற்கு பணிகள் மேற்கொள்ளப்பட்டதை மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண்.2478/2020/எச்1** | **தீர்மானஎண் .846**<br>**அனுமதிக்கப்பட்டது** |
| **28.08.2020** | **18)** மயிலாடுதுறை நகராட்சியில் பொதுசுகாதாரம் பிரிவில் திடக்கழிவு மேலாண்மை விதிகள் **2016–**ன்படி நகரின் முக்கிய பகுதிகளில் துாய்மை பணிகள் மேற்கொள்ள தனியார் நிறுவனம் மூலம் ஒப்பந்த அடிப்படையில் பணிகள் மேற்கொள்ள அரசாணை எண்.**101** நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர்வழஙகல்துறை நாள். **30.04.1997–**ன்படியும், அரசாணை எண்.**69** நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகல்துறை நாள்.**04.05.1998–**சுற்றறிக்கையின்படியும் மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் முதன்மை ஒப்புதல் கடிதம் ந.க.எண்.49771/P3/2012 நாள்.**13.12.2012 –**ன்படியும் **80** பணியாளர்களை மாவட்ட ஆட்சியர் நாகப்பட்டினம் அவர்களின் தினசரி ஊதிய விகிதத்தில் வெளிக்கொணர்வு மூலம் தனியார் நிறுவனம் Saram Enviro services Pvt Ltd சென்னை நிறுவனத்தின் மூலம் பணிகள்மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது.<br>மேற்கண்ட நிறுவனத்திற்கு ஒப்பந்த காலம் முடிவடைந்த நிலையில் **01.06.2020** முதல் மூன்று மாத காலத்திற்கு நகர்மன்ற தீர்மானம் எண்.**803**, நாள்.**30.06.2020–**ன்படி அனுமதி வழஙகப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது. மேற்கண்ட நிறுவனத்தின் காலநீட்டிப்பு ஒப்பந்தகாலம் **31.08.2020** உடன் முடிவடைகிறது. இந்நிலையில் நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களுக்கு இவ்வலுவலக ந.க.எண்.**2005/2019**/எச்**1** நாள்.**16.07.2019** மற்றும் **18.02.2020**தேதிய கடிதத்தின்படி திடக்கழிவு மேலாண்மை திட்ட விதிகளின்படி பணி செய்ய போதிய நிரந்தர துாய்மை பணியாளர்கள் இல்லாத காரணத்தினால் தனியார் நிறுவனம் மூலம் ஒப்பந்த அடிப்படையில் பணிகள் மேற்கொள்ள அனுமதி வழஙகுமாறு கோரப்பட்டுள்ளது. நகராட்சியில் தற்போது செயல்பட்டு வரும் மூன்று MCC மையஙகளுக்கு பொது மக்களிடமிருந்து வீடுகள் தோறும் பெறப்படும் தினசரி மக்கும், மக்காத கழிவுகளை பெற்று உரமாக்கும் பணிகள் தஙகுதடையின்றி நடைபெறுவதற்கு நகராட்சியில் உள்ள துாய்மை பணியாளர்கள் போதிய அளவில் இல்லாத நிலை உள்ளது. | **தீர்மானஎண் .847**<br>**அலுவலக குறிப்புஏற்று அனுமதிக்கப்பட்டது** |

இந்நிலையில் நகராட்சிப்பகுதிகளில் கொரோனா வைரஸ் நோய் பராவமல் தடுக்க நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு துாய்மை பணியாளர்களின் பணிகள் அவசியமாகிறது. மேலும் நகராட்சி பகுதிகளில் உள்ள தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகள், அரசு பொதுமருத்துவமனை அரசு அலுவலகங்கள், வணிக வளாகங்கள் போன்றவற்றில் தினந்தோறும் துாய்மை பணிகள் மேற்கொள்வதற்கு பணியாளர்கள் இல்லாத நிலை உள்ளது. எனவே Saram Enviro services Pvt Ltd சென்னை நிறுவனத்திற்கு தொடர்ந்து ஒப்பந்தகாலம் நீட்டிப்பு செய்யப்பட்டு வருவதால் தனியார் மூலம் ஒப்பந்தம் அடிப்படையில் பணியாளர்களை நியமித்திட நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களுக்கு அனுமதி வழங்ககோரி இவ்வலுவலக 02.09.2020ம் தேதிய ந.க.எண்.2005/2019/எச்1ன் கடிதம் மூலம் அனுப்பப்பட்டது.

நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அலுவலகத்திலிருந்து நிர்வாக அனுமதி பெறப்படாததால் பொதுசுகாதாரப்பணி அவசர அவசியம் கருதியும் துப்புரவு ஆய்வாளர்களின் தங்களது 25.08.2020ம்தேதிய அறிக்கையில் கொரோனா வைரஸ் நோய் பரவாமல் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளவும் பருவமழை காலத்தில் ஏற்படும் இடர்பாட்டுபணி மேற்கொள்ளவும் நகரின் அனைத்து பகுதிகளிலும் பொதுசுகாதாரப்பணிகள் மேற்கொள்ளவும் துாய்மை பணியாளர்கள் தேவைப்படுவதால் நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் உத்தரவினை எதிர்நோக்கி தற்போதைய ஒப்பந்ததாரர் Saram Enviro services Pvt Ltd சென்னை நிறுவனத்திற்கு ஏற்கனவே வழங்கப்பட்டு வரப்படும் மாவட்ட ஆட்சியரின் ஊதிய விகிதத்தின் அடிப்படையில் 01.09.2020 முதல் 31.12.2020 வரை மேலும் நான்கு மாத காலத்திற்கு 80 துாய்மை பணியாளர்களை கொண்டு பணிகள் மேற்கொள்ள Saram Enviro services Pvt Ltd சென்னை நிறுவனத்திற்கு 01.09.2020 முதல் 31.12.2020 வரை நான்கு மாத காலத்திற்கு ஒப்பந்தத்தை நீட்டிப்பு செய்து வழுஙகலாம ' என தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே Saram Enviro services Pvt Ltd சென்னை நிறுவனத்தின் 26.08.2020ம் தேதிய கடித்தில் நான்கு மாதங்களுக்கு ஏற்கனவே உள்ள ஒப்பந்தப்படி பணிகள் மேற்கொள்ள சம்மதித்து கடிதம் அளிக்கப்பட்டுள்ளது. எனவே Saram Enviro services Pvt Ltd நிறுவனத்திற்கு 01.09.2020 முதல் 31.12.2020 முடிய நான்கு மாதத்திற்கு ஒப்பந்த நீட்டிப்பு செய்வதற்கும் அதற்கான செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தற்போது கொரோனா வைரஸ் நோய் பரவாமல் தடுப்பு பணிகள் மேற்கொள்ள நகராட்சியில் நிரந்தர துாய்மை பணியாளர்கள் பற்றாக்குறையாக உள்ள காரணத்தினால் ஏற்கனவே ஒப்பந்த அடிப்படையில் பணி மேற்கொண்டுவரும் Saram Enviro services Pvt Ltd நிறுவனத்திற்கு 01.09.2020 முதல் 30.12.2020 வரையிலான நான்கு மாத காலத்திற்கு மட்டும் ஒப்பந்தத்தை நீட்டிப்பு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.4633/2019/எச்1**